## எட்டாம் வகுப்பு முதல் இயல்

1. "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே" எனத் தொடங்கும் பாடலை இயற்றியவர் யார்-**பாரதியார்**

2. பாரதியார் பிறந்த தேதி-***11-12-1882***

3. பாரதியார் பிறந்த ஊர்-**எட்டயபுரம் (தூத்துக்குடி மாவட்டம்)**

4. பாரதியாரின் பெற்றோர் பெயர்-**சின்னசாமி லட்சுமி அம்மாள்**

5. பாரதியார் நடத்திய இதழ்கள்-**இந்தியா, விஜயா**

6. பாரதியார் இயற்றிய உரைநடை நூல்கள்-**சந்திரிகையின் கதை, தராசு**

7. வசனகவிதைகளையும், சீட்டு கவிதைகள் எழுதியவர் யார்-**பாரதியார்**

8. பாரதியார் எழுதாத நூல் எது

A. பாப்பா பாட்டு

B. கண்ணன் பாட்டு

C. குயில் பாட்டு

D. பிசிராந்தையார் நாடகம்- **பிசிராந்தையார் நாடகம்**

9. பாஞ்சாலி சபதம் ஆசிரியர்-**பாரதியார்**

10. "சிந்துக்குத் தந்தை" என்று பாரதியாரை புகழ்ந்தவர்-**பாரதிதாசன்**

11. பொருந்தாது எது

A. செந்தமிழ் தேனீ

B. மறம் பாட வந்த மறவன்

*C.* புதிய அறம் பாட வந்த அறிஞன்

*D.* குழந்தை கவி

**______*D.* குழந்தை கவி**

*12.* "செந்தமிழே செங்கரும்பே செந்தமிழர் சீர் காக்கும்" என்ற கவிதையை இயற்றியவர் யார்-**தூ. அரங்கன்**

*13.* பொருத்துக

*A.* நிரந்தரம்-*1)* காலம் முழுமையும்

*B.* வைப்பு -*2)* நிலப்பகுதி

*C.* சூழ்கலி-*3)* சூழ்ந்துள்ள அறியாமை இருள்

*D.* இசை-*4)* புகழ்

*14.* வண்மொழி பிரித்துஎழுது-**வண்மை +மொழி**

*15.* தொல்லை என்பதன் பொருள்-**பழமை , துன்பம்**

*16.* "வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே" அடிகளின் ஆசிரியர்-**பாரதியார்**

*17.* என்றென்றும் பிரித்து எழுது-**என்று+என்றும்**

*18.* வானமளந்தது பிரித்து எழுது-**வானம்+அளந்தது**

*19.* எங்கெங்கு ஒழுங்குமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன-**வாழ்விலும் மொழியிலும்**

*20.* வாழ்வுக்குரிய ஒழுங்குமுறை-**ஒழுக்கம்**

*21.* மொழிக்குரிய ஒழுங்குமுறை**-மரபு**

*22.* "நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்" என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்-**தொல்காப்பியம்**

*23.* "மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்"என்ற வரி இடம்பெற்றுள்ள நூல்-**தொல்காப்பியம்**

*24.* இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் ______ இன் சேர்க்கையால் உருவானவை**-ஐம்பூதங்கள்**

25. உலகத்துப் பொருள்களை இருதிணை ஐம்பால் களாகவும் பாகுபடுத்திக் கூறுவது எம்மொழியின் மரபு-**தமிழ்**

26. தமிழ் மொழிச் சொற்களில் மரபு மாறினால் ____ மாறிவிடும்-**பொருள்**

27. வழா அமை தழா அல் சொல்களில் உள்ள 'ழா 'என்னும் எழுத்தை மூன்று மாத்திரை அளவு நீட்டித்து ஒலிப்பது எவ்வளபெடை-**உயிரளபெடை**

28. தொல்காப்பியத்தின் ஆசிரியர்-**தொல்காப்பியர்**

29. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல்-**தொல்காப்பியம்**

30. தொல்காப்பியத்தில்____ அதிகாரங்களை கொண்டுள்ளது-***3***

31. கீழ்க்கண்ட கூற்றுகளில் பொருந்தாதது

A. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டு உள்ளது

B. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது

C. "நிலம் நீர் தீ வளி விசும்போடு "இந்நூற்பா பொருளதிகாரத்தின் மரபியலில் உள்ளது

D. தொல்காப்பியம் அணி இலக்கணத்தை பற்றி கூறுகிறது-______***D.***
**தொல்காப்பியம் அணி இலக்கணத்தை பற்றி கூறுகிறது**

32. பொருத்துக

A. புலி-1) பறழ்

B. சிங்கம்-2) குருளை

C. யானை , பசு-3) கன்று

D. கரடி-4) குட்டி

33. பொருத்துக

A. புலி-1) உறுமும்

B. சிங்கம்-2) முழங்கும்

C. யானை-3) பிளிரும்

*D.* பசு-*4)* கதறும்

*E.* கரடி-*5)* கத்தும்

*34.* மனிதன் தன் கருத்தைப் பிறருக்கு அறிவிக்க _____ஐக் கண்டுபிடித்தான்-**மொழி**

*35.* மொழியை நிலைபெறச் செய்ய ____ ஐக் உருவாக்கினான்-**எழுத்து**

*36.* மனிதன் தோன்றிய காலத்தில் தன தேவைகளையும் கருத்துகளையும் அதற்கு தெரிவிக்க ______ பயன்படுத்தினான்-**சைகைகள்**

*37.* மனிதன் காலப்போக்கில் தனது குரலை பயன்படுத்தி, சொற்களைச் சொல்லி, சொற்களை செம்மைப்படுத்தி உருவானது-**பேச்சு மொழி**

*38.* மனிதன் தன் தலைமுறையினருக்கு தெரிவிக்க விரும்பி பாறைகளிலும், சுவர்களையும் தன் எண்ணங்களை எவ்வாறு பொறித்து வைத்தான்-**குறியீடுகளாக**

*39.* எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை-**குறியீடு**

*40.* எழுத்து - மொழியையோ வடிவத்தில் குறிக்காமல் பொருளின் ஓவிய வரி வடிவமாக குறிப்பது--**ஓவிய எழுத்து**

*41.* ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலை-ஒலி எழுத்து நிலை

*42.* கீழ்க்கண்ட கூற்றுகளில் பொருந்தாதது

*A.* 'ஸ' என்னும் வட எழுத்து கல்வெட்டுகளில் காணப்பட்டது

*B.* மெய்யை குறிக்க புள்ளி பயன்படுத்தப்படவில்லை

*C.* எகர ஒகர குறில் நெடில் வேறுபாடு இல்லை

*D.* அனைத்தும் சரி___ ***D.* அனைத்தும் சரி**

*43.* _______தோன்றிய பிறகே தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தை பெற்றுள்ளன- **அச்சுக்கலை**

*44.* தமிழ் எழுத்துக்களின் பழைய வரிவடிவங்களை கோயில்களில் உள்ள______*&*_____இல் காணமுடிகிறது**-கருங்கல்லில் சுவர்களிலும், செப்பேடுகளிலும்**

*45.* கல்வெட்டுகள் ___ நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன-***3***

*46.* செப்பேடுகள் ____ நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன-***7***

*47.* கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்கள்______&____-**வட்டெழுத்து , தமிழ் எழுத்து**

*48.* ______என்பது வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ஆகும்-**வட்டெழுத்து**

*49.* தமிழ் எழுத்து என்பது இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துக்களின் _____வடிவம்-**பழைய வரிவடிவம்**

*50.* சேர மண்டலம் பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில்_____&____ நூற்றாண்டு வரை கிடைக்கும் சாசனங்களில் வட்டெழுத்துகள் இடம்பெற்றுள்ளன-***8, 11***

*51.* முதலாம் ராஜராஜ சோழனின் ஆட்சிக்காலம்____நூற்றாண்டு-***11***

*52. 11*ஆம் நூற்றாண்டுக்கு பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில்____ எழுத்துக்கள் காணப்படுகின்றன-**பழைய தமிழ் எழுத்துக்கள்**

*53.* கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட-கண்ணெழுத்துக்கள்

*54.* "கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி"என்னும் தொடர் இடம் பெற்றுள்ள நூல்-**சிலப்பதிகாரம்**

*55.* தமிழ் மொழியில் எத்தனை வகை எழுத்துக்கள் வழக்கில் இருந்தன-***2***

*56.* தமிழ்மொழியில் இருவகை எழுத்துக்கள் வழக்கில் இருந்தன என்பதை அறிவதற்கான சான்று-**அரச்சலூர் கல்வெட்டு**

*57.* தமிழ் எழுத்தும் வட்டெழுத்து கலந்து எழுதப்பட்ட கல்வெட்டு-**அரச்சலூர் கல்வெட்டு**

*58.* எழுத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட ____, ____ போன்றவை காரணங்களாக அமைகின்றன-**எழுதப்படும் பொருள்களின் தன்மை , அழகுணர்ச்சி**

*59.* பழங்காலத்தில் ____, _____&____ போன்றவற்றில் எழுதினர்-**கற்பாறை, செப்பேடு , ஓலை**

*60.* பாறைகளில் எழுத்துக்கள் எவ்வாறு இருந்தன-நேர் கோடுகளாக

*61.* ஓலைகளில் நேர் கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் ஆதலால்_____ஐ பயன்படுத்தினர்-**வளை கோடுகள்**

*62.* எழுத்துக்களை அழகுப்படுத்த அவற்றின்மேல்_____ இடப்பட்டது-**குறுக்கு கோடு**

*63.* எகர ஒகர குறில் எழுத்துக்களை குறிக்க எழுத்துக்களின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் கொண்டு வந்தது-**தொல்காப்பியர்**

*64.* கீழ்க்கண்ட கூற்றுகள் சரியான ஆராய்க

*A.* அகர வரிசை உயிர்மெய் குறில் எழுத்துக்களை அடுத்து பக்க புள்ளி இடப்பட்டவை நெடிலாக கருதப்பட்டன

*B.* ஐகார எழுத்துகள் குறிப்பிட எழுத்துக்களின் முன் இரட்டை புள்ளி இட்டனர்

*C.* அகர வரிசை உயிர்மெய் குரல்களை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டவை அவ்காரவரிசை என கருதப்பட்டன

*D.* மகர எழுத்தை குறிப்பிட மகரத்தின் மேல் புள்ளி இட்டனர்

***E.* அனைத்தும் சரி**

*65.* நெடில் குறிக்க ஒற்றை புளிக்கு பதிலாக இக்காலத்தில் ____பயன்படுகிறது-**துணைக்கால்**

*66.* இரட்டை புள்ளிக்கு பதிலாக இக்காலத்தில் ___பயன்படுகிறது-**இணைக்கொம்பு**

*67.* தமிழ் எழுத்துக்களில் மிகப்பெரும் சீர்திருத்தம் செய்தவர்-**வீரமாமுனிவர்**

*68.* எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை களைந்தவர்-**வீரமாமுனிவர்**

*69.* தமிழ் எழுத்து சீர்திருத்த பணியில் ஈடுபட்டவர்-**தந்தை பெரியார்**

*70.* கல் தோன்றிய காலம் , உயிரோடு இயக்கம் இவற்றைப் போல இவற்றைபோல ______, ____ தேய்தல் இயற்கை-**சொல் தோன்றிய காலம், இயக்கம்**

*71.* ஒரு அடிச் சொல்லிலிருந்து பல சொற்கள் கழித்து பெருகுவது________இன் அடையாளம்-**மொழியின் வளர்ச்சி**

*72.* ______செந்தமிழ் ஆகவும் செழுந்தமிழாக உயிரோட்ட தமிழாகவும் இருந்துவருகிறது-**தமிழ் மொழி**

*73.* தமிழில் சொல் என்பதற்கு ____ என்பது பொருள்- **நெல்**

*74.* நெல் என்பதன் வழியில் வந்தவை-**சொன்றி, சோறு**

*75.* "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" ____ மொழி-**தொல்காப்பியர்**

*76.* கீழ்க்கண்ட கூற்றுகள் சரியான ஆராய்க

*A.* மொழி என்பது சொல் என்பதும் ஒரு பொருள்

*B.* மொழியை ஓரெழுத்து மொழி எழுத்து மொழி இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள்

உடைய மொழி என மூவகை ஆக்குவார்

*C.* உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் *126*

*D.* உயிர் நெடில் எழுத்துக்கள், உயிர்மெய் நெட்டெழுத்து நெட்டெழுத்துக்கள் என்றும் கூறுவர்

***E.* அனைத்தும் சரி**

*77.* "நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி"-**தொல்காப்பியர்**

*78.* "குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே" என்று கூறியவர்-**தொல்காப்பியர்**

*79.* ஓரெழுத்து ஒரு மொழி என நன்னூலார் குறிப்பிடுவது எத்தனை-*42*

*80.* ஓரெழுத்து ஒரு மொழி என நன்னூலார் குறிப்பிடுவதில் உள்ள குறில் எழுத்துக்கள் எத்தனை-**2(நொ, து)**

*81.* ஓரெழுத்து ஒரு மொழியில் உள்ள உயிர் எழுத்துக்கள்_______-**ஆ, ஈ , ஊ , ஏ , ஐ, ஓ**

***82.* மகர வரிசை____-மா, மீ, மூ, மே, மை , மோ**

*83.* தகர வரிசை____-**தா, தீ, தூ, தே, தை**

*84.* பகர வரிசை_____-**பா, பூ , பே, பை, போ**

*85.* நகர வரிசை____-**நா, நீ , நே, நை, நோ**

*86.* ககர வரிசை_______-**கா, கூ, கை, கோ**

*87.* சகர வரிசை_____-**சா, சீ, சே , சோ**

*88.* வகர வரிசை_______-**வா, வீ, வை, வெள**

*89.* யகரவரிசை____-**யா**

*90.* பூ, கா என்ற இரண்டு ஓரெழுத்து ஒருமொழி இணைந்து உருவான கலைச்சொல்-**பூங்கா**

*91.* வினாவிற்கு முன்னால் வந்து நிற்கும் ஓரெழுத்து ஒரு மொழி-**யா**

*92.* கீழ்க்கண்ட கூற்றுகள் சரியா என ஆராய்க

*A.* ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே தே என்பன ஓரெழுத்து ஒரு மொழிகள் ஆக உள்ளன

*B.* போ , வா, நீ, சூ, சே சோ என்பன எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும்

சொற்கள்

*C.* ஈ என்பது ஈக என்னும் பொருளில் வழங்கும் வெளிப்படை

*D.* அனைத்தும் சரி-***D.* அனைத்தும் சரி**

*93.* நாட்டில் உள்ள பெரும் மக்கள் கூடும் அவையை ___ என்பர்-**மாநாடு**

*94.* பலகுறு நிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை ____ என்பர்-**மாநிலம்**

*95.* உலகப் பெரும் பரப்பையும் இயக்கத்தையும் சுட்ட ___என்கிறோம்-**மா ஞாலம்**

*96.* _____என மாந்தளிர் நிறத்தை ஒப்புமை காட்டி உழைப்பது பெருவழக்கு-**மாநிறம்**

*97.* 'மா 'என்ற ஓரெழுத்து ஒருமொழியின் பொருள்-'**விலங்கு**

*98.* பொருத்துக

*A.* ஆன் - ஆ

*B.* மான் - மா

*C.* கோன் - கோ

*D.* தேன் - தே

*E.* பேய் - பே

*99.* ஏய் என்பதன் பொருள்-**என்னோடுகூடு , சேர்**

*100.* கீழ்க்கண்ட கூற்றுகள் சரியா

*A.* ஏ என்பதன் பொருள் அம்பு

*B.* ஏகலைவன் என்பவன் அம்பு எய்வதில் வல்லவன்

*C.* முள்ளம் பன்றியின் பழம்பெயர் எய்ப்

*D.* அம்பையை எய் பவர் எயினர்; அவர்தம் மகளிர் எயினர்

***E.* அனைத்தும் சரி**

*101.* அம்பை எய்து அவர் பெண்ணாக இருந்தால் அவரை எவ்வாறு அழைத்தனர்-**எயினியர்**

*102.* செந்தமிழ் அந்தணர் என்று அழைக்கப்படுபவர்-**இரா, இளங்குமரனா**ர்

*103.* "இலக்கண வரலாறு" என்னும் நூலின் ஆசிரியர்-**ரா. இளங்குமரனார்**

104. "தனித்தமிழ் இயக்கம், தமிழிசை இயக்கம்" என்னும் நூல்களின் ஆசிரியர்-**இரா. இளங்குமரனார்**

105. இளங்குமரனார் எந்த நூலை தொகுத்துள்ளார்-**தேவநேயம்**

106. இளங்குமரனார் திருச்சிக்கு அருகில் எந்த ஊரில் திருவள்ளுவரையும் பாவாணர் நூலகம் அமைத்து உள்ளார்? -**அல்லூர்**

107. "தமிழின் தனிப்பெரும் சிறப்பு" என்ற நூலின் ஆசிரியர்-**இரா. இளங்குமரனார்**

108. ஒலி மரபை அறிக

A. ஆந்தை-அலறும்

B. காகம்-கரையும்

C. சேவல், குயில்-கூவும்

D. கோழி-கொக்கரிக்கும்

E. புறா-குனுகும்

F. மயில்-அகவும்

G. கிளி-பேசும்

H. கூகை-குழறும்

109. தொகை மரபை காண்க

A. மக்கள்-கூட்டம்

B. பசு-ஆநிரை

C. ஆடு-ஆட்டு மந்தை

110. வினை மரபு அறிக

A. சோறு-சோறு உண்

B. தண்ணீர்-குடி

C. பூக்கள்-கொய்

D. முறுக்கு- தின்

E. பால்-பருகு

F. இலை- பறி

G. சுவர்- எழுப்பு

H. கூடை-முடை

I. பானை- வனை

111. கலைச் சொல் அறிவோம்

A. *Articulatory phonetic*- ஒலி பிறப்பியல்

B. *consonant* -மெய்யொலி

C. *Nasal consanant sound*-மூக்கொலி

D. *Epigraph* -கல்வெட்டு

E. *vowel*-உயிரொலி

F. *Lexicography*-அகராதியியல்

G. *Phoneme*-ஒலியன்

H. *Pictograph* -சித்திர எழுத்து

112. சொல்லும் பொருளும்

A. விசும்பு-வானம்

B. மயக்கம்-கலவை

C. இரு திணை-உயர்திணை, அஃறிணை

D. வழா அமை-தவறாமை

E. ஐம்பால்-ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

F. மரபு-வழக்கம்

G. திரிதல்-மாறுபடுதல்

H. செய்யுள்-பாட்டு

I. தழா அல்-தழுவுதல்

**புத்தக வினாக்கள்**

1. மக்கள் வாழும் நிலப் பகுதியைக் குறிக்கும் சொல்-**வைப்பு**

2. 'என்றென்றும்' பிரித்து எழுது- **என்று+என்றும்**

3. வானமளந்தது எனும் சொல்லை பிரித்து எழுது-**வானம் +அளந்தது**

4. அறிந்தது+ அனைத்தும் சேர்த்து எழுது -**அறிந்ததனைத்தும்**

5. வானம் +அறிந்த சேர்த்து எழுது**-வானமறிந்த**

6. பறவைகள்______பறந்து செல்கின்றன**-விசும்பில்**

7. இயற்கையை போற்றுதல் தமிழர்____-**மரபு**

8. இருதிணை பிரித்து எழுது-**இரண்டு +திணை**

9. ஐம்பால் பிரித்து எழுதுக-ஐந்து +பால்

10. தமிழ் எழுத்துக்கள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ___ காரணமாக அமைந்தது-**அச்சுக்கலை**

11. வளைந்த கோடுகள் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து ____ என்று அழைக்கப்படுகிறது-வட்டெழுத்து

12. தமிழ் எழுத்து சீர்திருத்த பணியில் ஈடுபட்டவர்-தந்தை பெரியார்

13. கடைச் சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள்_____**கண்ணெழுத்து**

14. எழுத்துக்களில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை களைந்தவர்- **வீரமாமுனிவர்**

## எட்டாம் வகுப்பு இரண்டாம் இயல்

1. "ஓடை ஆட உள்ளம் தூண்டுதே "என தொடங்கும் பாடலின் ஆசிரியர்- **வாணிதாசன்**

2. "செஞ்சொல் மாதர் வழிபாட்டின் சிறுக்கி ஏற்றம் உறவை மீட்டும்" என்ற பாடலின் வரி இடம்பெற்றுள்ள நூல்-**தொடுவானம்**

3. தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் என புகழப்படுபவர்**-கவிஞர் வாணிதாசன்**

4. வாணிதாசன் இயற்பெயர்-**அரங்கசாமி என்ற எத்திராசலு**

5. வாணிதாசன் யாருடைய மாணவர்**-பாரதிதாசன்**

6. வாணிதாசன் எந்த மொழிகளில் வல்லவர்-**தமிழ், தெலுங்கு , ஆங்கிலம், பிரென்ச்**

7. வாணிதாசனின் சிறப்பு பெயர்களுள் தவறானது

A. கவிஞரேறு,

B புலவரேறு

C. வேர்ட்ஸ்வொர்த்

D. பாவலர் மணி

E. அனைத்தும் சரி- **B. புலவரேறு**

8. வாணிதாசன் உக்கு செவாலியர் விருது வழங்கிய அரசு-**பிரஞ்ச்**

9. "தமிழச்சி" என்ற நூலின் ஆசிரியர்-**வாணிதாசன்**

10. "கொடி முல்லை" என்ற நூலின் ஆசிரியர்-**வாணிதாசன்**

11. எழிலோவியம் என்ற நூலின் ஆசிரியர்-**வாணிதாசன்**

12. "ஓடை "என்னும் பாடல் வாணிதாசனின் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது- **தொடுவானம்**

13. சொல்லும் பொருளும்

A. தூண்டுதல்-ஆர்வம் கொள்ளுதல்

B. ஈரம்-இறக்கம்

C. முழவு-இசைக்கருவி

D. நாணம்-வெட்கம்

E. நன்செய்-நிறைந்த நீர் வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம்

F. புன்செய்-குறைந்த நீரில் பயிர்கள் விளையும் நிலம்

G. வள்ளைப்பாட்டு–நெல் குத்தும் போது பாடப்படும் பாடல்

H. செஞ்சொல்-**திருந்திய சொல்**

14. கோணக்காத்துப் பாடலில் எந்த ஊரில் உள்ள தென்னம் பிள்ளைகள் எல்லாம் அழிந்தன-**வாங்கல்**

*15.* கோணக்காத்து பாடலில் அழிவில்லாத எந்த ஊரில் பருத்திச் செடிகள் எல்லாம் சேதமடைந்தன? -**காங்கேயம்**

*16.* கோணக்காத்துப் பாடலில் எந்த நாட்டில் உள்ள மரங்கள் எல்லாம் சின்னாபின்னமாக உடைந்து விழுந்தன? -**தொண்டைமான்**

*17.* கோணக்காத்து பாடலில் எந்த ஊரில் உள்ள ஏராளமான ஆடு மாடுகள் இறந்தன? - **தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி**

*18.* கோணக்காத்து பாடலில் கொல்லி மலையை சுற்றியுள்ள பகுதியில் வாழ்ந்தவர்கள் கூறப்படுபவர்கள்? -**சித்தர்கள்**

*19.* கோணக்காத்து பாடலைப் உள்ளவர்கள் எந்த கடவுளை காக்குமாறு வேண்டுகிறார்கள்? -**முருகன்**

*20.* "உருமங்கட்டிய முகிலால்- கோணக்காத்து "என்ற பாடலின் ஆசிரியர்- **வெங்கம்பூர் சாமிநாதன்**

*21.* காங்கேய நாடு கொங்கு மண்டலத்தின் _____ நாடுகளில் ஒன்று? **-24**

*22.* நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் மக்கள் பட்ட துயரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் ____ பாடல்களாக பாடினர்? **-கும்மி பாடல்**

*23.* பேச்சுத் தமிழில் அமைந்த கும்மி பாடல்கள்-**பஞ்சக் கும்மிகள்**

*24.* பஞ்சக் கும்மிகள் என்ற நூலைத் தொகுத்தவர்**-புலவர். செ. இராசு**

*25.* "காத்து நொண்டிச் சிந்து "என்ற பாடலை இயற்றியவர்-**வெங்கம்பூர் சாமிநாதன்**

*26.* சொல்லும் பொருளும்

*A.* முகில்- மேகம்

*B.* கெடி கலங்கி-மிக வருந்தி

*C.* சம்பிரம் உடன்-முறையாக

*D.* சேகரம்-கூட்டம்

*E.* வின்னம்-சேதம்

*F.* வாகு-சரியாக

*G.* காலன்-எமன்

*H.* மெத்த-மிகவும்

*23.* சுகுவாமிஷ் பழங்குடியினர் அமெரிக்காவில் எங்கு வாழ்ந்தனர்– **பூஜே சவுண்ட்**

*24.* சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவர் யார்-**சியாட்டல்**

*25.* சியாட்டல் தன் பகுதியில் உள்ள இயற்கையை காக்க என் நாட்டின் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதினார்? -**அமெரிக்கா**

*26.* சியாட்டல் எதை தங்கள் சகோதரர்கள் என்று கூறுகிறார்? -, **குதிரைகள், கழுகுகள், மான்கள்**

*27.* சியாட்டல் கூறும் நறுமணம் மிகுந்த மலர்கள்-**சகோதரிகள்**

*28.* உடன் பிறந்தவர்கள் என்று சியாட்டல் கூறுபவை -**ஆறுகள்**

*29.* சுகுவாமிஷ் பழங்குடியினர் தாயாக கருதுபவை -**பூமி**

*30.* தந்தையாக கருதுபவை-**வானம்**

*31.* நிலம்பொது என்ற கட்டுரை எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது? -**தமிழகப் பழங்குடிகள்**

*32.* "தமிழகப் பழங்குடிகள்" என்ற நூலை இயற்றியவர்-**பக்தவச்சல பாரதி**

*33.* பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் வாழ்ந்து வரும் பழங்குடியினர்-**காடர்**

*34.* வெட்டுக்கிளியும் சருகுமானும் என்ற பாடத்தில் நீளம் பூவின் இதழ்களுக்கு இடையே வசித்து வந்தது எது? - **பச்சை வெட்டுக்கிளி**

*35.* வெட்டுக்கிளியும் சருகுமானும் என்ற பாடத்தில் வரும் சருகுமான் இன் பெயர்? - **கூரன்**

*36.* மிகச்சிறிய பழங்குடி சமுதாயத்தினர் யார்? –**காடர்கள்**

*37.* வெட்டுக்கிளியும் சருகுமானும் என்ற பாடத்தில் இடம் பெறுவதில் கூச்சப்படும் விலங்கு? -**சருகு மான்**

*38.* வெட்டுக்கிளியும் சருகுமானும் என்ற பாடத்தில் வரும் சிறுத்தையின் பெயர்? - **பித்தக்கண்ணு**

*39.* கூறன் எப்படி தப்பித்தது? -**புனுகுப் பூனையின் துர்நாற்றத்தால்**

*40.* காடர்கள் தங்கள் பேசும் மொழியை எவ்வாறு அழைக்கின்றனர்? -**ஆல் அலப்பு**

*41.* காடர்களின் கதைகளைத் தொகுத்தவர்கள்? - **மனிஷ் சாண்டி, மாதிரி ரமேஷ்**

*42.* காடர்களின் கதைகளை "யானையோடு பேசுதல்" என்னும் தலைப்பில் தமிழாக்கம் செய்தவர்? **வ. கீதா**

*43.* உலக ஈர நில நாள்-**பிப்ரவரி *2***

*44.* உலக இயற்கை வளப் பாதுகாப்பு நாள்-**ஜூலை *28***

*45.* உலக ஓசோன் நாள்-**செப்டம்பர் *16***

*46.* உலக இயற்கை நாள்-**அக்டோபர் *3***

*47.* உலக வனவிலங்கு நாள்-**அக்டோபர் *6***

*48.* உலக இயற்கை சீரழிவு தடுப்பு தினம்-**அக்டோபர் *5***

*49.* கலைச்சொல் தெளிவோம்

*A. Tribes*-பழங்குடியினர்

*B. Plain*-சமவெளி

*C. Valley*-பள்ளத்தாக்கு

*D. Thicket* -புதர்

*E. Ridge*-மலை முகடு

*F. Locust*-வெட்டுக்கிளி

*G. Leopard*-சிறுத்தை

*H. Bud*-மொட்டு

*50.* எக்காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துக்களை கொண்ட நூல்? -திருக்குறள்

*51.* திருக்குறளின் பெருமையை பாடும் நூல்-**திருவள்ளுவமாலை**

*52.* " கல்லாதவர் பயனில்லாத களர்நிலம் போன்று கூறியவர்"என்று கூறியவர்-**திருவள்ளுவர்**

*53.* "பெருநாவலர்" என்று அழைக்கப்படுபவ**ர்-திருவள்ளுவர்**

*54.* "முதற்பாவலர், நாயனார் "என்று அழைக்கப்படுபவர்-**திருவள்ளுவர்**

*55.* திருவள்ளுவர் ______ ஆண்டுகளுக்கு முற்பட்டவர்-***2000***

*56.* உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல்? - **திருக்குறள்**

*57.* திருக்குறள்______ பகுப்புகளை கொண்டது-***3***

*58.* அறத்துப்பாலில் உள்ள இயல்கள்-**பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல் , ஊழியல்**

*59.* பொருட்பாலில் உள்ள இயல்கள்-***3*(அரசியல், அமைச்சியல், ஒழிபியல்)**

*60.* இன்பத்துப் பாலில் உள்ள இயல்கள்**-*2*(களவியல், கற்பியல்)**

**எட்டாம் வகுப்பு இரண்டாம் இயல் *புத்தக வினாக்கள்***

*1.* பள்ளிக்குச் சென்று கல்வி_____ சிறப்பு-**பயிலுதல்**

*2.* செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டு ஏற்ப முழவை மீட்டுவது**-ஓடை**

*3.* நன்செய் பிரித்து எழுது**-நன்மை +செய்**

*4.* நீளுழைப்பு என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது**-நீள்+உழைப்பு**

*5.* சீருக்கு+ ஏற்ப சேர்த்து எழுது-**சீருக்கேற்ப**

*6.* ஓடை+ ஆட சேர்த்து எழுது-**ஓடையாட**

*7.* வானில் கரு_____ தோன்றினால் மழை பொழியும் என்பர்-**முகில்**

*8.* முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ______யும் ஓடிவிடும்**-காலனை**

*9.* 'விழுந்ததங்கே 'என்ற சொல்லை பிரித்து எழுத கிடைப்பது**-விழுந்தது+ அங்கே**

*10.* 'செத்திறந்த' என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது- **செத்து+ திறந்த**

*11.* பருத்தி +எல்லாம் சேர்த்து எழுது-**பருத்தியெல்லாம்**

*12.* செவ்விந்தியர்கள் நிலத்தை ______ மதிக்கின்றனர்**-தாயாக**

*13.* 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது'**இனிமை+ஓசை**

*14.* பால்+ ஊறும் என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்-**பாலூறும்**

*15.* புகழாழும், பலியாலும் அறியப்படுவது**-நடுவு நிலைமை**

*16.* பயனில்லாத களர் நிலத்திற்கு ஒப்பானவர்கள்**-கல்லாதவர்**

*17.* 'வல்லுருவம்' என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது-'**வன்மை+ உருவம்**

18. நெடுமை +தேர் என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்-**நெடுந்தேர்**

19. 'வருமுன்னர் 'எனத் தொடங்கும் குரலில் பயின்று வந்துள்ள அணி-**உவமை அணி**

## எட்டாம் வகுப்பு மூன்றாம் இயல்

1. மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன-**நோய்கள்**

2. உடலில் ஏற்படும் நோயை தவிர உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் நோய்கள் என்று குறிப்பிட்டார்கள்-**நம் முன்னோர்கள்**

3. உள்ளத்தில் தோன்றும் நோய்களுக்கு மருந்தாக விளங்குபவை-
**அறக்கருத்துக்களை உடைய இலக்கியங்கள்**

4. "பேர்தற்கு அரும் பிணி தாம் இவை அப்பிணி தீர்வதற்கு" என்னும் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல்-**நீலகேசி**

5. நீலகேசி ____ காப்பியங்களுள் ஒன்று-**ஐஞ்சிறு**

6. நீலகேசி ______ கருத்துக்களின் வாதங்களின் அடிப்படையில் விளங்குகிறது-
**சமண சமயம்**

7. நீலகிரியில் உள்ள சுருக்கங்கள்-**கடவுள் வாழ்த்து நீங்கலாக 10 சுருக்கங்கள்**

8. சமயத் தத்துவங்களை விவாதிப்பதால் இந்நூலை எவ்வாறு குறிப்பிடுகின்றன-
**தருக்க நூல்**

9. நீலகேசி ஆசிரியர்-**ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை**

10. "தீர்வனவும் தீரா திறத்தனவும் செய் மருந்தின்" என்னும் பாடல் வரி நீலகேசியின் எந்த சருக்கத்தில் இடம் பெற்றுள்ளது? -**தரு உரைச் சுருக்கம்**

11. நீலகேசி கூறும் நோயின் வகைகள் எத்தனை? -3

12. பிறவித் துன்பங்கள் நீக்கும் 3 மருந்துகள் எவை? - **நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம்**

13. சொல்லும் பொருளும்

A. தீர்வன-நீங்குபவை

B. உவ சமம்-அடங்கி இருத்தல்

C. நிழல் இகழும் -ஒளி பொருந்திய

D. பேர்தற்கு-அகற்றுவதற்கு

E. திரி யோகம் மருந்து-மூன்று யோக மருந்து

F. தெளிவு-நற்காட்சி

G. திறத்தன-தன்மையுடையன

H. கூற்றவா -பிரிவுகளாக

I. பூணாய்-அணிகலன்களை அணிந்தவளே

J. பிணி-துன்பம்

K. ஓர்தல்-நல்லறிவு

L. பிறவார்-பிறக்க மாட்டார்

14. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது-**பழமொழி**

15. நோய் வந்தபின் தீர்க்க முயல்வதே விட வருமுன் காப்பதே_____ ஆகும்-**அறிவுடைமை**

16. நல்ல உடல் நலத்திற்கு அடிப்படை-**நல்ல உணவு, உடல் தூய்மை, உடற்பயிற்சி**

17. "உடலின் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம்" என தொடங்கும் பாடலின் ஆசிரியர்-**கவிமணி தேசிய விநாயகம்**

18. "காலை மாலை உலாவி நிதம் காற்று வாங்கி வருவோரின்"-இன்னும் பாடல் வரி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது? -**மலரும் மாலையும்**

19. தேசிகவிநாயகம் அவர்களின் சிறப்பு பெயர்? **-கவிமணி**

20. கவிமணி பிறந்த ஊர்**- தேருர் குமரிமாவட்டம்**

21. கவிமணி எத்தனை ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்? **-36**

22. கவிமணி அவர்கள் மொழிபெயர்த்த நூல்**? -உமர்கய்யாம் பாடல்கள்**

23. கவிமணி அவர்களின் கவிதை நூல்கள்? **-ஆசிய ஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை**

24. சொல்லும் பொருளும்

A. நித்தம் நித்தம்-நாள் தோறும்

B. மட்டு-அளவு

C. சுண்ட-நன்கு

*D.* வையம்-உலகம்

*E.* பேணுவையேல்-பாதுகாத்தால்

*F.* திட்டு முட்டு-தடுமாற்றம்

*25.* "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின் "எனத் தொடங்கும் பாடலை இயற்றியவர்-**திருவள்ளுவர்**

*26.* பழந்தமிழர் அறிந்த மருத்துவ முறைகள் எவை? –**மூலிகை மருத்துவம் , அறுவை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம், யோகம்**

*27.* தொடக்க காலத்தில் மனிதர்கள் நோய்க்கு மருந்தாக பயன்படுத்தியவை-**தாவரங்களின் பகுதிகள்**

*28.* உடலுக்கும், பிரபஞ்சத்திற்கும் உள்ள ஒற்றுமையை கண்டறிந்து உடலில் ஐம்பூதங்களின் ஆல் ஏற்படும் மாற்றங்களை விளக்கியது எவை? –**சாங்கியம், ஆங்கிலம்**

*29.* "வேர் பாரு ; தாழை பாரு மிஞ்சினா கால்பட்ட செந்தூரம் பார்" என்ற வரியை சொன்னவர்–**சித்தர்கள்**

*30.* சித்த மருத்துவத்தில் எதிலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது? – **மூலிகை , தாதுப்பொருள், உலோகம்**

*31.* "நோய்நாடி நோய்முதல் நாடி" என்று கூறியவர்–**திருவள்ளுவர்**

*32.* நோய்க்கான காரணங்கள் எது? –**உணவு , மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம்**

*33.* எடை அதிகரிப்பால் ஏற்படும் நோய்கள்- **ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய்**

*34.* நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகள்–**சித்த மருத்துவம் , ஆயுர்வேத மருத்துவம் , யுனானி, அலோபதி**

*35.* நலமாக வாழ்வதற்கு எது அவசியம்? –**சரியான உணவு, சரியான தூக்கம், சரியான உடற்பயிற்சி**

*36.* எளிமையாக கிடைக்கக்கூடிய சத்துள்ள உணவுகள் எவை? –**காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்கள்**

*37.* கைப்பேசியை விளையாடுவதை தவிர்த்து நாள்தோறும் ______-**ஓடியாடி விளையாடுங்கள்**

*38.* உலகிலேயே மிக வியப்பானது-**மனித மூளை**

*39.* பிரபஞ்சத்திலேயே மிகவும் அடர்த்தியான சிக்கலான ஒரு பொருள்-**மனித மூளை**

*40.* மனித மூளையில் உள்ள செல்களின் எண்ணிக்கை-**டிரில்லியன்**

*41.* மனித மொழியில் எத்தனை கோடி நியூரான்கள் உள்ளன? **-பத்தாயிரம் கோடி அல்லது நூறு பில்லியன்**

*42.* மனித மூளை எத்தனை பகுதிகளைக் கொண்டது? -***3* (உள் மூளை, நடுமூளை, பின் மூளை)**

*43.* மூக்கு மற்றும் கண்ணின் முடிவு எங்கு உள்ளது? **-முன்மூளை**

*44.* மூளைக்கு ஒரு நிமிடத்திற்கு ____ மில்லி குருதி தேவைப்படுகிறது***? -800***

*45.* நியூரான்களின் வலைப்பின்னலின் எதிரொளிப்பு**-புத்திசாலித்தனம், படைப்பு, உணர்ச்சி , ஞாபகம், தன்னுணர்வு**

*46.* மூளை எங்கு முளைக்கிறது? -முதுகுத்தண்டு

*47.* நம் உடலின் அசைவுகளையும், உணர்ச்சிகளையும், வளர்ச்சியையும் கட்டுப்படுத்துவது? **-சிறு மூளை**

*48.* மூளை, உடம்பின் எடையில் எத்தனை பங்கை கொண்டுள்ளது***? -1/5***

*49.* இருமல் , தும்மல், கொட்டாவி, வாந்தி ஆகிய தன்னிச்சையான செயல்களை செய்யும் உறுப்பு-**முதுகுத் தண்டின் குறுக்கு இணைப்புகள்**

*50.* ஒரு மனிதனின் தனித்திறமைகள் மூளையின் எந்தப் பகுதியில் நடைபெறுகிறது? -**வலது பகுதி**

*51.* மூளையின் எந்தப் பகுதியில் நாம் வடிவங்களை உணருகிறோம்? **-வலது பகுதி**

*52.* அறிவாற்றல், பிரச்சினைகளை அலசுதல், சதுரங்கம் இவை பணிகளை மூளையின் எந்தப் பகுதி பார்த்துக்கொள்கிறது? **-இடது பக்க மூளை**

*53.* மூளையின் வலது பகுதி ஆக்கிரமிப்பு அதிகமுள்ளவர்கள்***? -*கலைகளில் சிறந்தவர்கள்**

*54.* மூளையின் இடது பகுதி ஆக்கிரமிப்பு அதிகம் உள்ளவர்கள்***? -*நன்கு படித்தவர்கள்**

*55.* யாருக்கு முகத்தில் உணர்ச்சிகளைக் காட்டும் திறமை அதிகம்? -**மனிதன்**

*56.* எத்தனை நிமிடத்திற்கு ஒருமுறை மனநிலை மாறுகிறது என

ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்? -90

57. சராசரி மனிதன் தன் வாழ்நாளில் எத்தனை வருடங்கள் தூங்குகிறான்? -**20**

58. மனிதன் வாழ்நாளில் எத்தனை லட்சம் கனவுகள் காண்கிறான்? **-3**

59. சுஜாதாவின் இயற்பெயர்-**ரங்கராஜன்**

60. " என் இனிய எந்திரா" என்ற நூலை எழுதியவர்**-சுஜாதா**

61. "மீண்டும் ஜீனோ, ஸ்ரீரங்கத்து தேவதைகள் "என்னும் நூல்களை எழுதியவர்-**சுஜாதா**

62. "தூண்டில் கதைகள்" நூலின் ஆசிரியர்-**ரங்கராஜன்**

63. மின்னணு வாக்கு இயந்திரம் உருவாக்கும் பணியில் முக்கிய பங்காற்றியவர்? -**சுஜாதா**

64. கலைச்சொல் தெளிவோம்

A. disease-நோய்

B. Herbs-மூலிகை

C. Millets -சிறுதானியங்கள்

D. Auditor-பட்டயக் கணக்கர்

E. Side effects -பக்க விளைவு

F. Antibiotics-நுண்ணுயிர் முறி

G. Gene-மரபணு

H. Allergy-ஒவ்வாமை

**எட்டாம் வகுப்பு மூன்றாம் இயல் *புத்தக வினாக்கள்***

1. உடல் நலம் என்பது_____ இல்லாமல் வாழ்தல் ஆகும்- பிணி

2. நீலகேசி கூறும் நோயின் வகைகள்**-3**

3. " இவையுண்டார்" என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது**-இவை+ உண்டார்**

4. தாம் +இனி என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும்-**தாமினி**

5. காந்தியடிகள்____ போற்ற வாழ்ந்தார்-**வையம்**

6. "நலமெல்லாம்" பிரித்து எழுது-**நலம்+ எல்லாம்**

7. இடமெங்கும் பிரித்து எழுது-**இடம்+ எங்கும்**

8. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு______ பயன்படுத்தினர்-**தாவரங்களை**

9. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ______ நீட்சியாகவே உள்ளது-**உணவின்**

10. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்கள் ஒன்று -**ரத்தக் கொதிப்பு**

11. சமையலறையில் செலவிடும் நேரம்______ செலவிடும் நேரம் ஆகும்-**நல்வாழ்வுக்காக**

## எட்டாம் வகுப்பு நான்காம் இயல்

1. மனிதனுக்கு அழகையும் உயர்வையும் தரக்கூடிய உண்மையான அணிகலன் எது? -**கல்வி**

2. யாருக்கு அழகு தரும் அணிகலனும் தேவையில்லை? -**கல்வி கற்றவருக்கு**

3. " கற்றோர்க்கு கல்வி நலனே" என்னும் பாடல் உள்ள நூல்-**நீதிநெறி விளக்கம்**

4. " முழுமணி பூணுக்கு போன் வேண்டா யாரே அழகுக்கு அழகு செய்வார் "பாடல் வரி நீதிநெறி விளக்கத்தில் எத்தனாவது பாடல்? -**13**

5. கலன் என்ற சொல்லின் பொருள்-**அணிகலன்**

6. முற்ற என்ற சொல்லின் பொருள்? -**ஒளிர**

7. குமரகுருபரர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர்**? -17**

8. தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கும் பல சிற்றிலக்கியங்களை படைத்தவர்? -**குமரகுருபரர்**

9. கயிலைக் கலம்பகம் என்ற நூலை இயற்றியவர்-**குமரகுருபரர்**

10. கந்தர் கலிவெண்பா, சகலகலாவள்ளிமாலை, மீனாட்சிஅம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூல்களின் ஆசிரியர்-**குமரகுருபரர்**

11. மக்களின் வாழ்வுக்கு தேவையான நீதிகளை சுட்டிக் காட்டுவதால் பெயர் பெற்ற நூல்-**நீதிநெறி விளக்கம்**

12. நீதிநெறி விளக்கத்தில் கடவுள் வாழ்த்து உட்பட எத்தனை வெண்பாக்கள் உள்ளன? -**102**

13. "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்னும் பாடல் வரி உள்ள நூல்-**நாலடியார்**

14. "கத்தியை தீட்டாதே உன் புத்தியை தீட்டு" என்ற பாடலின் ஆசிரியர்-**ஆலங்குடி சோமு**

15. அறிவே ஆற்றல் என்பது _____கூற்று-**ஆன்றோர்**

16. _______. ______ஒரு மனிதனை வாழ்வில் உயரச் செய்யும்-அ**றிவு, உழைப்பு**

17. " ஆத்திரம் கண்ணை மறைத்து விடும் போது அறிவுக்கு வேலை கொடு" என்று கூறியவர்-**ஆலங்குடி சோமு**

18. "இங்கே இருப்பது சில காலம் இதற்குள் ஏனோ அகம்பாவம்" என்று பாடியவர்-**ஆலங்குடி சோமு**

19. எதன் மூலம் கிடைக்கும் வெற்றி நமக்கு பெருமை தரும்? -**அறிவினாலும் அன்பினாலும்**

20. தடம் என்பதன் பொருள்-**அடையாளம்**

21. அகம்பாவம் என்பதன் பொருள்-**செருக்கு**

22. ஆலங்குடி சோமு எந்த மாவட்டத்தில் பிறந்தார்? **-சிவகங்கை**

23. சோமு தமிழ்நாடு அரசின் எவ்விருதைப் பெற்றார்? **-கலைமாமணி**

24. ஆலங்குடி சோமு________பாடலாசிரியராக புகழ்பெற்றவர்**-திரைப்பட**

25. மனிதன் விலங்கில் இருந்து மாறுபட்டு உயர்ந்த இதற்கு அடிப்படையாக விளங்குவது___-**கல்வி**

26. இளமையில் கல் என்பது**-முதுமொழி**

27. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது-**கல்வி**

28. "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்ற வரிகள் இடம் பெற்றுள்ள நூல்-**திருக்குறள்**

29. ஏட்டுக்கல்வி மட்டும் கல்வி ஆகாது; _______ கல்வியும் முக்கியமானது-**தொழிற்கல்வி**

30. " கல்வி என்பது வருவாய் தேடும் வழிமுறை அன்று "-என்று கூறியவர்'**விஜயலட்சுமி பண்டிட்**

*31.* ஐக்கிய நாடுகள் அவையின் முதல் பெண் தலைவர்-**விஜயலட்சுமி பண்டிட்**

*32 .* "தாய்மொழி வாயிலாக கல்வி பெற்றதால் சிறப்பு" என்று கூறியவர்-**திரு. வி. க**

*33.* "தாய் நாடு என்னும் பெயர் தாய் மொழியை கொண்டே பிறப்பது" என்று கூறியவர்-**திரு. வி. க**

*34.* "ஏடு அன்று கல்வி; சிலர் எழுதும் பேசும் இயல் அன்று கல்வி" என்றவர்-**குலோத்துங்கன்**

*35.* பொருத்துக

*A.* இயற்கை ஓவியம்-பத்துப்பாட்டு

*B.* இயற்கை இன்பக்கலம்-கலித்தொகை

*C.* இயற்கை வாழ்வு இல்லம்-திருக்குறள்

*D.* இயற்கை தவம்-சிந்தாமணி

*36.* பொருத்துக

*A.* இயற்கை பரிணாமம்-கம்பராமாயணம்

*B.* இயற்கை அன்பு-பெரியபுராணம்

*C.* இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள்-சிலப்பதிகாரம் , மணிமேகலை

*D.* இயற்கை இறையுறையுள் -தேவார , திருவாசக திருவாய் மொழிகள்

*37.* புலன்களின் விருந்து

*A.* அருவி- முழவும்

*B.* குயில்- குரலும்

*C.* மயில்-அகவலும்

*D.* மலர்-மனமும்

*E.* தேன்-இனிமையும்

*F.* தென்றல்- வீசலும்

*38.* "தமிழ் இன்பத்திலும் சிறந்த இன்பம் இவ்வுலகில் உண்டா" என்று கூறியவர்-**திரு. வி. க**

*39.* கொடிய நாட்டு வேதங்கள்  யாருடைய யாழ் மயங்கச் செய்யும்? - **பாணர்**

*40.* "நாடக கல்வி வாழ்விற்கு வேண்டா என்று நான் கூரேன்" என்று கூறியவர்- **திரு. வி. க**

*41.* "இடைக்காலத்தில் நாடகக்கலை யால் தீமை விளைந்த போது அதை சிலர் அழிக்க முயன்றது உண்டு என்று "கூறியவர்- **திரு. வி. க**

*42.* புற உலக ஆராய்ச்சிக்கு அறிவியல் _____ போன்றது**? -கொழுகொம்பு**

*43.* கல்யாண சுந்தரனார் பிறந்த ஊர்-**திருவாரூர்**

*44.* தமிழ் தென்றல் என்று போற்றப்படுபவர்- **திரு. வி. க**

*45.* "பெண்ணின் பெருமை" என்ற நூலை எழுதியவர்-**கல்யாண சுந்தரனார்**

*46.* " தமிழ்ச்சோலை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்" என்ற நூலை எழுதியவர்- **கலியாணசுந்தரனார்**

*47.* திரு வி க-**திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தரனார்**

*48.* "பொதுமை வேட்டல், முருகன் அல்லது அழகு" எனும் நூல்களை எழுதியவர்- **திரு. வி. க**

*49.* கல்வியைப் பற்றி நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பாடம் திரு. வி. க இன் எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது? -**இளமை விருந்து**

*50.* இயற்கை கல்வியும் வேண்டும் என்று கூறியவர்- **திரு. வி. க**

*51.* பி. ச. குப்புசாமி யாரோடு நெருங்கி பழகி வந்தார்? -**ஜெயகாந்தன்**

*52.* "ஜெயகாந்தனோடு பல்லாண்டு "என்ற நூலை எழுதியவர்- **பி. ச. குப்புசாமி**

*53.* பி. ச. குப்புசாமி _______ தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்- **தொடக்கப்பள்ளி**

*54.* ஆன்ற குடிப்பிறத்தல் எனும் சிறுகதை எந்த நூலில் இருந்து எடுக்கப்பட்டது? -**ஓர் ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் குறிப்புகள்**

*55.* தமிழ் சொல் தருக

*A. Punctuation* -நிறுத்தக்குறி

*B. Ornament*-அணிகலன்

*C. Talent*-திறமை

*D. Translation* -மொழிபெயர்ப்பு

*E. Awareness* -விழிப்புணர்வு

*F. Reform*-சீர்திருத்தம்

## எட்டாம் வகுப்பு நான்காம் இயல் புத்தக வினாக்கள்

1. கற்றவருக்கு அழகு தருவது-**கல்வி**
2. 'கலனல்லால்' என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது -**கலன்+ அல்லால்**
3. என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் _____இன்றி வாழ்ந்தார்-**அகம்பாவம்**
4. 'கோயிலப்பா' என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது'**கோயில்+ அப்பா**
5. பகைவன் +என்றாலும் சேர்த்து எழுத கிடைக்கும் சொல்-**பகைவனென்றாலும்**
6. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது-**கல்வி**
7. கல்விப் பயிற்சி உரிய பருவம்-**இளமை**
8. இன்றைய கல்வி_____ நுழைவதற்கு கருவியாக கொள்ளப்பட்டு வருகிறது-**தொழிலில்**
9. கலப்பில் _____ உண்டென்பது இயற்கை நுட்பம்-**வளர்ச்சி**
10. புறவுலக ஆராய்ச்சிக்கு______ கொழுகொம்பு போன்றது-**அறிவியல்**
11. வாழ்விற்குரிய இன்பத் துறைகள் தலையாயது_____ இன்பமாகும்-**காவிய**

## எட்டாம் வகுப்பு ஐந்தாம் இயல்

1. மனிதர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் உடையது எது? -**இசை**
2. "பண்ணின் தமிழ் இசை பாடலின் பழவெய் முழவு அதிர" என்ற பாடலின் ஆசிரியர்-**சுந்தரர்**
3. திருக்கேதாரம்- ஆசிரியர்-**சுந்தரர்**

4. பண்ணோடு சேர்ந்த தமிழ் பாடல்களைப் பாடும்போது முதிர்ந்த மூங்கில் ஆகிய_____, ___ இணைந்து ஒலிக்கும்-**புல்லாங்குழலும் முழவும்**

5. திருக்கேதாரம் என்னும் பாடலில் பொன்வண்ணன் நீர்நிலைகள் _____ போன்ற நீர் திவலைகள் வாரி இறைக்கும்-**வைரம்**

6. திருக்கேதாரம் என்னும் பாடலில் மத யானைகள் எதை வாரி வீசும்? -மணிகள்

7. தேவாரம் பாடிய மூவரில் ஒருவர்? -**சுந்தரர்**

8. சுந்தரரின் சிறப்பு பெயர்கள்-**நம்பியாரூரர், தம்பிரான் தோழர்**

9. சுந்தரர் பாடிய தேவாரப் பாடல் பன்னிரு திருமுறைகளுள் எத்தனையாவது திருமுறை? -**7 ஆம் திருமுறை**

10. திருத்தொண்டத் தொகையை இயற்றியவர்-**சுந்தரர்**

11. திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகக் கொண்டு இயற்றப்பட்டது? -**பெரியபுராணம்**

12. பெரியபுராணம் ஆசிரியர்-**சேக்கிழார்**

13. தேவாரம் யார் பாடிய பாடல்களின் தொகுப்பு? -திருஞானசம்பந்தர் , திருநாவுக்கரசர், சுந்தரர்

14. தேவாரம் தொகுத்தவர்-**நம்பியாண்டர் நம்பி**

15. தேவாரம் பிரித்துஎழுது- **தே+ வாரம்**

16. தே+வாரம் என்பதன் பொருள்-**இனிய இசை பொருந்திய பாடல்கள்**

17. தே+ ஆரம் என்பதன் பொருள்-**இறைவனுக்கு சூட்டப்படும் மாலை**

18. பதிகம் என்பது____ பாடல்களைக் கொண்டது**-10**

19. ஒவ்வொரு மனிதனும் வளர்த்துக்கொள்ள வேண்டிய உயர் குணங்கள்-**அன்பு, அறிவு, பண்பு**

20. "ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல் "என்னும் பாடல் இடம் பெற்ற நூல்-**கலித்தொகை**

21. கலித்தொகைப் பாடலில் இல்வாழ்வு என்பது_______உதவி செய்தல் ஆகும்-**அலந்தவர்க்கு**

22. "பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல் "எனும் வரியை பாடியவர்-**நல்லந்துவனார்**

23. கலித் தொகை_____ நூல்களுள் ஒன்று-**எட்டுத்தொகை**

24. கலித்தொகை _____ பாவகையால் ஆன நூல்-**கலிப்பா**

25. கலிப்பா ____ பாடல்களைக் கொண்டது-***150***

26. சொல்லும் பொருளும்

A. பண்-இசை

B. கனகசுனை -பொன்வண்ண நீர்நிலை

C. மத வேழங்கள்-மத யானைகள்

D. முரலும்-முழங்கும்

E. பழாவெய் -முதிர்ந்த மூங்கில்

27. கலித்தொகையை தொகுத்தவர்-**நல்லந்துவனார்**

28. ஆற்றுதல் என்பது-அலர்ந்தவருக்கு உதவுதல்

B. போற்றுதல் என்பது-புணர்ந்தாரைப் பிரியாமை

C. பண்பு எனப்படுவது-பாடறிந்து ஒழுகுதல்

D. அன்பு எனப்படுவது-தன்கிளை செறாஅமை

E. அறிவு எனப்படுவது-பேதையார் சொல் நோன்றல்

F. செறிவு எனப்படுவது-கூறியது மறாஅமை

G. நிறை எனப்படுவது-மறை பிறர் அறியாமை

H. முறை எனப்படுவது-கண் ஓடாது உயிர் வவ்வல்

29. கலித்தொகை_____பிரிவுகளைக் கொண்டது-***5***

30. கண்ணுக்கும் கருத்துக்கும் மகிழ்ச்சியை அளித்து நற்பண்புகளை வளர்ப்பது-**கலைகள்**

31. சொல்லும் பொருளும்

அலர்ந்தவர்- வறியவர்

நோன்றல்- பொறுத்தல்

போற்றார்-பகைவர்

பொறை-பொறுமை

செரா அமை -வெறுக்காமை

மறா அமை -மறவாமை

*32.* அன்றாட பயன்பாட்டுக்காக அழகிய பொருள்களை தொழில் முறையில் உருவாக்கும் கலை____-**கைவினைக் கலை**

*33.* மிகவும் பழமையான கைவினைக் கலைகளில் ஒன்று-**மண்பாண்டக் கலை**

*34.* ____ அகழாய்வில் பானை ஓடுகள் கிடைத்துள்ளன-**சிந்து சமவெளி**

*35.* தமிழ்நாட்டில்____ ஊரில் முதுமக்கள் தாழிகள் கிடைத்துள்ளன-**ஆதிச்சநல்லூர்**

*36.* _____ ஊரில் கலையழகு மிகுந்த மண் கலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன-**செம்பியன் கண்டியூர்**

*37.* மதுரைக்கு அருகிலுள்ள _____ல் ஏராளமான சுடுமண் பொருட்கள் கிடைத்துள்ளன-**கீழடி**

*38.* பானை செய்தலை_____ என்று சொல்வது மரபு-**பானை வனைதல்**

*39.* மண்பாண்டக் கலையின் இன்னொரு வளர்ச்சி நிலை____-**சுடுமண் சிற்பக்கலை**

*40.* பானை செய்யும் சக்கரத்தின் பெயர்-**திருவை**

*41.* டெரகோட்டா என்பதன் பொருள்-**சுடுமண் சிற்பக்கலை**

*42.* மட்பாண்டங்களை போன்று களிமண்ணால் செய்யப்பட்டு சூளையில் சுட்டு எடுக்கப்படுபவை-**சுடுமண் சிற்பங்கள்**

*43.* தமிழ்நாட்டின் மாநில மரம்-**பனை**

*44.* _____, ______&______என மூன்று வகை மூங்கில்கள் உண்டு-**கல் மூங்கில், மலை மூங்கில், கூட்டு மூங்கில்**

*45.* ______மூங்கில் கைவினை பொருள்கள் செய்வதற்கு ஏற்றவை-**கூட்டு**

*46.* குழந்தைகளைப் படுக்க வைப்பது_____பாய்-**தடுக்கு பாய்**

*47.* உட்கார்ந்து உண்ண உதவுவது_____ பாய் -**பந்திப் பாய்**

*48.* உட்காரவும், உண்ணவும் , படுக்கவும் உதவுவது-**திண்ணைப் பாய்**

*49.* திருமணத்துக்கு பயன்படுத்தப்படுவது _____ பாய்-**பட்டுப் பாய்**

*50.* "கூம்பொடு மீப்பாய் கலையாது" என்ற வரி எந்த நூலில் உள்ளது? -**புறநானூறு**

*51.* இஸ்லாமியர்கள் தொழுகைக்கு பயன்படுத்தப்படுவது என்ன வகை பாய்? -**தொழுகைப்பாய்**

*52.* பனை மட்டையில் நாரிலிருந்து________, ___, ____போன்றவை செய்யப்படுகின்றன-**கயிறு, கட்டில், கூடை**

*53.* பிரம்பு எனப்படுவது என்ன வகை தாவரம்-கொடி வகை

*54.* பிரம்பின் தாவரவியல் பெயர்-கலாமஸ் ரோடாங்

*55.* பிரம்பு வளர ஏதுவான இடங்கள்-**நீரின் இந்த வாய்க்கால் வரப்புகள், மண் குகைகள்**

*56.* தமிழகத்தில் இப்போது அருகிவிட்ட தாவரம்-**பிரம்பு**

*57.* நம் தேவைக்காக எந்தெந்த இடங்களில் இருந்து பிழம்பு தருவிக்கப்படுகிறது-**அசாம், அந்தமான், மலேசியா**

*58.* ஒரு சொல்லின் பொருளை அறிய பயன்படுவது-**அகராதி**

*59.* நகை, அழுகை , வீரம் உள்ளிட்ட ஒன்பது சுவைகளில் வெளிப்படுத்தக்கூடிய கலை-**இசை**

*60.* ஒரு பொருள் குறித்த அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள பயன்படுவது_____-**கலைக்களஞ்சியம்**

*61.* இசைக்கருவிகளை இசைக்குப் பாடல் பாடுவதில் வல்லவர்கள்-**பாணர்**

*62.* இசைக்கு இனிமை செய்யும் இசைக்கருவியின் வகைகள்-***4***

*63.* "நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கி பானன்" என்னும் பாடல் வரி இடம் பெற்ற நூல்-**புறநானூறு**

*64.* இசை_____, _____என இரண்டு வகைப்படும்-**குரல்வழி இசை கருவி வழி இசை**

*65.* விலங்குகளின் தோலால் சுடப்பட்டு செய்யப்படும் கருவிகள்-**தோல் கருவிகள் எ. கா முழவு , முரவு**

*66.* நரம்பு அல்லது தந்திகளை உடையவை-**நரம்புக் கருவிகள் எ. கா யாழ், வீணை**

*67.* காற்றைப் பயன்படுத்தி செய்யப்படுபவை-**காற்றுக் கருவிகள் எ. கா குழல், சங்கு**

*68.* ஒன்றோடு ஒன்று மோதி இசைக்க செய்யப்படுபவை-**கஞ்சக் கருவிகள் எ. கா ஜால்ரா சேகண்டி**

*69.* உடுக்கை என்பது இடை சுருங்கிய______- **கைப்பறை**

*70.* பெரிய உடுக்கை____& சிறிய உடுக்கை____-**தவண்டை, குடுகுடுப்பை**

*71.* "தண்டுடுக்கை தாளந்தக்கை சாரநடம் பயில்வார்"-என்று பாடியவர்-**சம்பந்தர் தேவாரம்**

*72.* ______முகங்களை உடைய முரசு வகையைச் சேர்ந்தது, குடமுழா-***5***

*73.* குடமுழாவின் வேறு பெயர்-**பஞ்சமகா சப்தம்**

*74.* _____அருங்காட்சியகத்தில் குடமுழா காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது-**சென்னை**

*75.* காடுகளில் வளரும் மூங்கில் வண்டுகள்______-**துளையிடும்**

*76.* ______, _____&_______ஆகிய மரங்களால் குழல்கள் செய்யப்படுகின்றன-**சந்தனம், செங்காலி, கருங்காலி**

*77.* கொன்றைக் குழல், முல்லை குழல் , ஆம்பல் குழல் என பலவகையான குழல்கள் இருப்பதாக கூறும் நூல்-**சிலப்பதிகாரம்**

*78.* "குழல் இனிது யாழ் இனிது "எனும் பாடல் வரியை பாடியவர்-**திருவள்ளுவர்**

*79.* தொடக்க காலத்தில் மனிதர்கள் இறந்த மாடுகளின்______ ஐப் பயன்படுத்தி ஒலி எழுப்பினர்-**கொம்பு**

*80.* _____ஆல் கொம்புகள் செய்யப்படுகின்றன-**பித்தளை அல்லது வெண்கலம்**

*81.* திருவிழாக்காலங்களில் ஊர்வலங்களில் பயன்படும் கொம்புகள் ஏதேனும் இரண்டு கூறு-**ஊதுகொம்பு, எக்காலம்**

*82.* சிங்க நாதம் , துத்தரி என்பன-**இசைக் கருவியான கொம்பின் வகைகள்**

*83.* இசைக்கருவிகளில் இயற்கையானது-**சங்கு**

*84.* சங்கின் ஒலி-**சங்கநாதம்**

*85.* இலக்கியங்களில் சங்கு______என்று அழைக்கப்படுகிறது-**பணிலம்**

*86.* "சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்" என்னும் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்-**திருப்பாவை**

*87.* சாலரா என்பதின் மறு பெயர்-**பாண்டில்**

*88.* வட்டவடிவமான______ வகையைச் சேர்ந்தது, சேகண்டி-**மணி**

*89.* சேகண்டி யின் மறுபெயர்-**சேமங்கலம்**

*90.* இறுதி ஊர்வலத்தின்போது இசைக்கப்படுவது-**சேகண்டி**

*91.* பலா மரத்தில் செய்யப்பட்டு விலங்கு தோலினால் கட்டப்படும் கருவி-**திமிலை**

*92.* திமிலையின் வேறு பெயர்- **பாணி**

*93.* திமிலை_____வடிவத்தில் அமைந்திருக்கும்-**மணல் கடிகாரம்**

*94.* "சங்கொடு தாரை காளம் தழங்கொலி" பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல்-**பெரியபுராணம்**

*95.* விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி-**பறை**

*96.* பழங்காலத்து செய்திகளைத் தெரிவிக்க______ முழக்கினர் - **கோட் பறை**

*97.* பகைவர்களின் ஆநிரை கவரச் செல்லும் போது_____ ஐ முழக்குவர் - **ஆகோட் பறை**

*98.* பறை – **தப்பு**

*99.* மத்து –**ஓசையின் பெயர்**

*100.* இசைக்கருவிகள் அதெல்லாம் தளம் அடிப்படை- **மத்தளம்**

*101.* மத்து+ தளம்= மத்தளம் என்று கூறியவர்-**அடியார்க்கு நல்லார்**

*102.* முதற்கருவி எனப்படுவது-**மத்தளம்**

*103 .* எந்த கல்வெட்டில் கோயிலுக்கு நியமிக்கப்பட்ட இசைக்கலைஞர்கள் கொட்டி மத்தளம் வாசிப்பவர் ஒருவர் இருந்தார் என்று கூறுகிறது? -**தஞ்சை பெரிய கோயில்** கல்வெட்டு

*104.* "மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்" என்ற வரி இடம்பெற்றுள்ள நூல்-**நாச்சியார் திருமொழி**

*105.* தமிழர்கள் போர் துணையாக கொண்ட கருவிகளுள் முதன்மையானது-**முரசு**

*106.* ______, ______&_____என்று மூன்று வகையான முரசுகள் புழக்கத்தில் இருந்தன-**படை முரசு, கொடை முரசு , மண முரசு**

*107.* தமிழ் மக்களிடம்_______வகையான முரசுகள் வழக்கத்தில் இருப்பதாக_____நூல் கூறுகிறது- ***36*, சிலப்பதிகாரம்**

*108.* மாக் கண் முரசம் என்று_____நூல் குறிப்பிடுகிறது-**மதுரைக்காஞ்சி**

*109.* ஒரே முகத்தை உடைய முரசு வகையைச் சேர்ந்தது______- **முழவு**

*110.* ஒரு பெரிய குடத்தின் வாயில் தோலை இழுத்து கட்டப்பட்ட கருவி- **முழவு**

*111.* மண்ணமை முழவு என________நூலில் இடம்பெற்றுள்ளது- **பொருநராற்றுப்படை**

*112.* காலத்தை அறிவிக்க______, ____ஆகியவை பயன்படுத்தப்பட்டன-**நாளிகை முழவு , காலை முழவு**

*113.* "கலை உணக் கிழிந்த முழவு மருள் பெரும் பழம்"____-**புறநானூறு**

*114* . ______, ______போன்றவை மிகப்பழமையான யாழ்-**பேரி யாழ், செங்கோட்டியாழ்**

*115.* பேரியாழ்____ நரம்புகளை கொண்டது-***21***

*116.* மீன் வடிவில் உள்ள மகரயாழ்____ நரம்புகளை கொண்டுள்ளது-***19***

*117.* சகோடயாழ்______நரம்புகளை கொண்டது-***14***

*118.* யாழ் போன்ற அமைப்பை உடைய நரம்புக்கருவி____-**வீணை**

*119.* _______என்னும் வீணை பல்லவ மன்னன்_____காலத்தில் வழக்கில் இருந்தது- **பரிவாதினி, மகேந்திரவர்மன்**

*120.* கலைச்சொல் அறிவோம்

*Crafts*-கைவினைப் பொருள்கள்

*Flute*-புல்லாங்குழல்

*Drum* -முரசு

*Basketry*-கூடை முடைதல்

*Knitting*-பின்னுதல்

*Horn*-கொம்பு

*Artisan*-கைவினைஞர்

*Rite*-சடங்கு

**எட்டாம் வகுப்பு ஐந்தாம்  இயல் புத்தக வினாக்கள்**

1. காட்டிலிருந்து வந்த_____ கரும்பை த்தின்றன - **வேழங்கள்**
2. 'கனகச்சுனை' என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது-**கனகம்+ சுனை**
3. முழவு +அதிர என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்-**முழவதிர**
4. பசியால் வாடும்_____ உணவளித்தல் நமது கடமை**- அலந்தவர்க்கு**
5. நம்மை_____ப் பொறுத்துக்கொள்ள வேண்டும்-**இகழ்வாரை**
6. மறைபொருளைக் காத்தல்____எனப்படும்- **நிறை**
7. 'பாடறிந்து' என்னும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது' **பாடு+ அறிந்து**
8. 'முறை +எனப்படுவது' என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல் - **முறையெனப்படுவது**
9. பழந்தமிழ் இலக்கியங்களை பாதுகாத்து வைத்தவை- **பனையோலைகள்**
10. பானை_____ ஒரு சிறந்த கலையாகும்-**வனைதல்**
11. ' மட்டுமல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது'**மட்டும்+ அல்ல**
12. 'கயிறு+ கட்டில்' என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்'**கயிற்றுக்கட்டில்**
13. அரசரை அவரது_____ காப்பாற்றும்-**வெண்கொற்றக் குடை**
14. சொல் வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும்_____தகுதி அறிந்து பேசவேண்டும்**-அவையின்**
15. 'கண்ணோடாது' எனும் சொல்லை பிரித்து எழுத கிடைப்பது**-கண்+ ஓடாது**
16. 'கசடற' என்னும் சொல்லைப் பிரித்து எழுத கிடைப்பது-**கசடு+ அற**
17. 'என்று +ஆய்ந்து' என்பதனை சேர்த்து எழுத கிடைக்கும் சொல்**-என்றாய்ந்து**